**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி – 2020**

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புதுக்கவிதையில் முரண்தொடை அமைத்துப் பாடியவர் யார்?
2. நேரிசை வெண்பாவின் அடிவரையறை யாது?
3. நால்வகைப் பாக்களுக்குரிய பாவினங்கள் யாவை?
4. புதுக்கவிதையை உரைவீச்சு என்றவர் யார்?
5. பத்துப்பாட்டில் அகநூல்கள் எவை?
6. கதையின் தொடக்கம் எவ்வாறு அமைய வேண்டும்?
7. நாவலின் அகச்சூழலை விவரிக்க.
8. எழுபதுகளில் சிறுகதையின் இலக்கியத் தன்மை பாதிக்கப்படுவதற்கு எவை காரணமாயின?
9. நாடோடிகளின் சிறப்பு யாது?
10. ஆமைச்சமூகமும், ஊமை முயல்களும் சிறுகதையில் ஊமை முயல் என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?
11. இவ்வுலகம் உய்வு பெறுவதற்கான வழி யாது?
12. தொழில் முறைக் கலைஞர்களாகச் சங்க இலக்கியம் மூலம் அறியப்படும்

இருவரைக் குறிப்பிடுக.

13. முதல் குறவஞ்சி நாடகம் எது?
14. நாற்காலிக்காரர் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
15. தமிழ் உரைநடை வரலாற்றில் சிறப்பிடம் பெறும் உரை எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. வியனிலைச் சிந்து – ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
2. கட்டளைக் கலித்துறை யாப்பின் இலக்கணம் யாது? அந்த யாப்பில் அமைந்த இரு நூல்களைக் குறிப்பிடுக.
3. தமிழில் தொடக்க கால நாவலாசிரியர்கள் மூவர் பெயர்களையும், அவர்கள் எழுதிய நாவல்களின் பெயர்களையும் கூறுக.
4. வரலாற்று நாவல்களில் கதை மாந்தர் எவ்வாறு அமைய வேண்டும்?
5. இடைக்காலப் பெண்ணிய நாவல்கள் பற்றி விளக்குக.
6. தொடக்க காலச் சிறுகதைகளின் போக்குகளுக்கு யாருடைய கதைகள் எடுத்துக்காட்டுகளாய்க் கூறப்பட்டுள்ளன?
7. பெண்களின் சிக்கல்களை வெளிப்படுத்தும் மூன்று சிறுகதைகள் யாவை? அவற்றின் படைப்பாளர்கள் யாவர்?
8. சிவசங்கரி எழுதிய சிறுகதையின் மூலம் அவருடைய எதிர்பார்ப்புகளாக அறியப்படும் கருத்துகள் மூன்றினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதைகளின் வெளிப்பாட்டு முறைகளை விளக்குக

(அல்லது)

(ஆ) தமிழில் தொடக்ககாலச் சிறுகதைகள் சமூக இன்னல்களை எடுத்துக் கூறியிருப்பதை உறுதிபடுத்துக.

2. (அ) காப்பியங்களின் பாடுபொருள் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கியவர்களைப் பற்றி விளக்கி எழுதுக.

3. (அ) படைப்பாளனின் தகுதிகள், படைப்பிலக்கியப் பயன்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் நாடக இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை தருக.

***